ORIGINAL ARTICLE

# வாசிப்புப் பனுவலில் முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் அணுகுமுறை ஓர் ஆய்வு

## [VAASIPPU PANUVALIL MUKKIYA KARUTTUKALAI KANDARIYUM ANUKUMURAI OOR AAYVU]

## AN ANALYSIS OF THE MAIN FINDING APPROACH IN THE COMPREHENSION TEXT

க. மகேஸ்வரி [1] / K. Mageswary [1]

[1]சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா. / Sultan Idris Education University, Malaysia. மின்னஞ்சல் / Email: fiona_mages@yahoo.com

DOI: https://doi.org/10.33306/mjssh/59

**ஆய்வுச் சாரம்**

வாசிப்புப் பனுவலில் உள்ள முக்கியக் கருத்துகளைக் கண்டறிய மாணவர்கள் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். வினா அணுகுமுறையைப் பயன்படுத்தி திறம்படக் கற்றல் கோட்பாட்டின் (Mastery Learning) வழி மாணவர்கள் முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் திறனை வலுப்படுத்த முடியும். வாசிப்புப் பனுவலில் உள்ள முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் திறன் மாணவர்கள் கருத்துணர் கேள்விகளில் சிறந்து விளங்கவும் வழிவகுக்கிறது. அவ்வகையில் இந்த ஆய்விற்குப் பேராக்கில் அமைந்துள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் உள்ள 20 மாணவர்கள் தரவாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வாய்வில் நேர்காணல் செய்யப்பட்ட இரண்டு தமிழ் ஆசிரியர்களின் கருத்தின்படி வினா அணுகுமுறை முக்கியக் கருத்துகளைக் கண்டறிய உதவுகிறது என்பதை அறியமுடிந்தது.

**கருச்சொற்கள்:** வாசிப்புப் பனுவல், வினாச் சொற்கள், திறம்படக் கற்றல், இடைநிலைப் பள்ளி, ஆசிரியர்கள், மாணவர்கள்

**Abstract**

Students face difficulty in identifying key concepts in the reading passages. Mastery Learning theory, using query approach, can strengthen students' ability to identify key concepts. The ability to identify key points in reading comprehension leads students to excel in comprehension text questions. Twenty students from a secondary school located in Perak were selected as

respondents for this study. Based on the interview session with two Tamil Language teachers, the study found that the query approach helps to identify key points in comprehension texts.

**Keywords:** Comprehension text, finding approach, secondary school, teachers, students

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 27th July 2019, revised 20th August 2019, accepted 10th September 2019

**முன்னுரை**

1957-ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரையில் தமிழ்மொழிப் பாடத்திட்டத்திற்கான கலைத்திட்டம் பல மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது. 2003-ஆம் ஆண்டில், இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டது. இப்பாடத்தை மாணவர்கள் முதலாம் ஆண்டு தொடங்கி ஆறாம் ஆண்டு வரை வாரத்திற்கு ஒரு மணி நேரம் கற்கும் சூழல் வடிவமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2017-ஆம் ஆண்டில் கல்வி அமைச்சு இடைநிலைப்பள்ளிகளுக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தை அறிமுகம் செய்தது. பிறகு, மறுசீரமைத்த இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழிப் பாடத்திட்டம் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, இடைநிலைப் பள்ளிகளுக்கான தர ஆவணமாக வெளியாகியது (மலேசிய கல்வி அமைச்சு, 2005)[1].

தமிழ்மொழிப் பாடத்தைத் தேர்வுப் பாடமாக எடுக்கும் மாணவர்கள் இடைநிலைப்பள்ளியில் மூன்றாம் படிவ மதிப்பீட்டுத் தேர்விலும், மலேசியக் கல்விச் சான்றிதழ் தேர்விலும் அதனை மேற்கொள்கின்றனர். கே.பி.எஸ்.எம் (KBSM) தமிழ்மொழிப் பாடத்திட்டதிலும் கே.எஸ்.எஸ்.எம் (KSSM) தமிழ்மொழிப் பாடத்திட்டத்திலும் மாணவர்கள் முக்கியக் கருத்துகளை அடையாளம் காணும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது (கிங்ஸ்டன் பால் தம்புராஜ், 2016)[2]. இருப்பினும், மாணவர்கள் முக்கியத் கருத்துகளை அடையாளம் காண்பதில் பொதுவாகவே சிக்கலை எதிர்நோக்குகின்றனர். மாணவர்களின் பாடத்திட்டத்தில் முக்கியமான ஒரு கற்றல் தரமாக ‘முக்கியக் கருத்துகளை அடையாளம் காணுதல்’ விளங்குகின்றது. முக்கியக் கருத்துகளை அடையாளம் காண அறிந்திருக்கும் மாணவர்களின் கேட்கும் திறன், சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பிறருடன் பேசும் பொழுது கருத்துடன் பேசும் அறிவாற்றல் போன்றவைகள் மேம்படுத்தப்படுகிறன (Abdul Aziz, 2000)[3] மாணவர்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் முறையிலும் இத்திறன் அமையப்பெற்றுள்ளது. இருப்பினும், பல மாணவர்கள் முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பதை இன்னும் கைவரப்பெறாமலே இருக்கினறனர் (Abdul Aziz, 2000)[3] கலைத்திட்டத்தில் முக்கியக் கருத்துகளை அடையாளம் காணும் திறனுக்கு எந்த அளவிற்கு

முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றதோ அதே அளவிற்கு வினா சொற்களின் பயன்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றது (மலேசியக் கல்வி அமைச்சு, 2017)[4]. கேள்விகள் கேட்டு நுண்ணறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது கல்வியின் மற்றொரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது (மலேசியக் கல்வி அமைச்சு, 2017)[4]. இத்திறனும், தொடக்கப்பள்ளி முதல் இடைநிலைப்பள்ளி வரை போதிக்கப்படுகிறது (மலேசியக் கல்வி அமைச்சு, 2017)[4]. பள்ளிகளில் மாணவர்களுக்கு வினா சொல் அறிமுகம், கேள்விகளை எழுப்பும் முறை, வினா சொல் பயன்பாடு போன்றவற்றைக் கற்றுக் கொடுக்கின்றனர். அதுமட்டுமின்றி, தமிழ்மொழி தேர்வுகளில் கருத்துணர் கேள்விகளுக்கு விடை அளிக்க மாணவர்கள் இவ்வினா முறையை அறிந்து வைத்திருக்க வேண்டும் என வழியுறுத்தப்படுகிறது. கேள்வி கேட்கும் திறனை வளர்த்து கொள்வதன் மூலம் மாணவர்கள் பல தகவல்களைச் சுலபமாகத் திரட்ட முடியும். அவற்றில் மாணவர்கள் வாசிக்கும் ஒரு பனுவலில் உள்ள தகவலைப் பெற கேள்வி கேட்கும் திறன் பெரும் பங்காற்றுகிறது.

அவ்வகையில், மாணவர்கள் ஒரு பனுவலை வாசித்து அப்பனுவலைச் சார்ந்த சில கேள்விகளைக் கேட்டால் கிடைக்கப்படும் விடைகள் முக்கியக் கருத்துகளாக அமைய அதிக வாய்ப்புகள் உள்ளன. இஃது அத்திறனைச் சுலபத்தில் அடையவும் வழிவகுக்கும் (Nik Safiah, 1993)[5] எனவே, அதன் அடிப்படையில் இடைநிலைப்பள்ளிகளில் படிவம் இரண்டு மாணவர்களுக்கு இந்த இரண்டு திறன்களும் போதிக்கப்படுவதனால் அம்மாணவர்களை முன்னிலைப் படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வின் நோக்கமானது வாசிப்புப் பனுவலில் முக்கியக் கருத்துகளை அடையாளம் காண்பதில் வினாச் சொற்களின் பயனைக் கண்டறிவதே ஆகும்.

## ஆய்வு நெறிமுறைகள்

பேரா மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் இவ்வாய்வு நடத்தப்பட்டது. இது விளக்க முறையையும் அளவிடல் முறையையும் கொண்டு அமைந்த பண்புச்சார், அளவுச்சார் ஆய்வாகும்.

ஆய்வு நடத்தப்பட்ட இடைநிலைப்பள்ளியில் உள்ள இரண்டாம் படிவத்தைச் சார்ந்த 20 மாணவர்களுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள பண்புச்சார் முறை பயன்படுத்தப்பட்டது. மாணவர்களின் அடைவுநிலையை அளவுசார்ந்து ஒப்பிட ஒப்பிட்டியல் முறையும் கையாளப்பட்டது. இவ்வாய்வு 8 வாரங்களுக்கு மேற்கொள்ளப்பட்டது. முன்னறித் தேர்வு, ஆறு

வாரங்களுக்கான தொடர் நடவடிக்கைகள் மற்றும் பின்னறித் தேர்வை நடத்தி முடிக்க இக்கால அவகாசம் போதுமானதாக அமைந்தது.

திரட்டப்பட்ட தரவுகளின் வழி மாணவர்களின் தரம் உயர்ந்துள்ளது. இதன் பதில்கள் தொகுக்கப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ளன.

## ஆய்வு கண்டுபிடிப்பு

ஆய்வாளர் வினா முறையைப் பயன்படுத்தி முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் ஓர் ஆய்வை மேற்கொண்டார். இவ்வாய்வின் வழி வினா அணுகுமுறை இரண்டாம் படிவ மாணவர்களின் முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் திறனை மேம்படுத்தியுள்ளது என்பது அறியப்பட்டது. வினா அணுகுமுறையைப் பயன்படுத்தி முக்கியக் கருத்துகளை அடையாளம் காணும் முறை மாணவர்களுக்கு இலகுவான ஒரு வழிமுறையாகவும் இத்திறனைக் கற்பிக்கும் பொழுது மாணவர்கள் சுலபமாகப் புரிந்து கொள்கின்றனர் என்பதையும் இவ்வாய்வின் வழி கண்டறிய முடிந்தது. சரளமாக வாசிக்க முடியாத மாணவர்களுக்கும் இம்முறை பெரிதும் உதவியது என்பதையும் ஆய்வாளர் கண்டறிந்தார். அவ்வகையில் மாணவர்கள் நடவடிக்கை 1 மற்றும் பின்னறித் தேர்வில் எழுப்பிய கேள்விகளின் உதாரணங்களும் அக்கேள்விகளுக்கு மாணவர்கள் வழங்கிய பதில்களும் கீழே வழங்கப்பட்டுள்ளன. இவை மாணவர்கள் பயன்படுத்திய வினா முறை அவர்களின் கேள்விக் கேட்கும் திறனையும் முக்கியக் கருத்துகளை அடையாளம் காணும் திறனையும் எங்ஙனம் மேம்படுத்தியுள்ளது என்பதைக் காட்டுகிறது.

அட்டவணை 1

*நடவடிக்கை 1 மற்றும் பின்னறித் தேர்வில் மாணவர்கள் எழுப்பிய கேள்விகளின் உதாரணங்கள்*

| **நடவடிக்கை 1**<br>**தலைப்பு: இணையம்** | **பின்னறித் தேர்வு**<br>**தலைப்பு: தாய்மொழிக் கல்வி** |
|---|---|
| அ) எது விரல் சொடுக்கும் நேரத்தில் தகவல்களைக் கண்முன்னே கொண்டு வந்தது?<br>ஆ) இணையம் எவ்வகையில் துணைப்புரிகின்றது?<br>இ) எது அத்தியாவசிய தேவைகளுள் ஒன்று?<br>ஈ) எதனைக் கொண்டு சேமித்து வைக்க முடியும்? | அ) இப்பனுவல் எதைக் குறிக்கிறது?<br>ஆ) தாய்மொழி எப்படிபட்ட மொழி?<br>இ) நம் அடையாளத்தைப் பேண நாம் என்ன செய்ய வேண்டும்?<br>ஈ) ஏன் நாம் தாய்மொழியைக் கற்க வேண்டும்?<br>உ) எவற்றை நாம் அறிந்து கொள்ள தாய்மொழி உதவுகிறது? |

மேற்கண்ட கேள்விகள், மாணவர்கள் நடவடிக்கை ஒன்றிலும் பின்னறித் தேர்விலும் எழுப்பிய கேள்விகளாகும். மாணவர்களின் கேள்விக் கேட்கும் திறனிலும் வினா முறையின் பயன்பாட்டிலும் அதிகமான வேறுபாடுகளைக் கண்டறிய முடிந்தது. நடவடிக்கை ஒன்றில் மாணவர்கள் பத்தியில் உள்ள கருத்துகளைக் கொண்டு கேள்விகளை எழுப்பினர். சில மாணவர்கள் ஒவ்வொரு வாக்கியமும் முக்கியக் கருத்துகள் எனவும் கூறினர். பத்தியில் உள்ள உதாரணங்களையும் முக்கியக் கருத்துகளாக அடையாளம் கண்டு கூறினர். மாணவர்கள் கேள்விக் கேட்கும் திறனிலும் முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் திறனிலும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை அறிய முடிந்தது. இதற்குச் சான்றாக மாணவர்கள் நடவடிக்கை 1இல் கேள்விகளுக்கு வழங்கிய பதில்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது.

i. எது விரல் சொடுக்கும் நேரத்தில் தகவல்களைக் கண்முன்னே கொண்டு வந்தது?

- இணையம் உலக நடப்புகளையும் தகவல்களையும் விரல் சொடுக்கும் நேரத்தில் நம் கண்முன்னே கொண்டு வருகிறது.
- கணினி உலக நடப்புகளைக் கண்முன்னே கொண்டு வருகிறது.

ii. இணையம் எவ்வகையில் துணைப்புரிகின்றது?

- கோப்புகளையும் தகவல்களையும் சேகரித்து வைக்கத் துணைப்புரிகிறது.
- மாணவர் சமுதாயம் பயன்பெற உதவுகிறது.
- மாணவர்கள் பாடக் குறிப்புகளைப் பெறுதல், ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெற இணையம் உதவுகிறது.
- இணையத்தின் மூலம் கல்வி பயின்று பட்டம் பெற முடியும்.

iii. எது அத்தியாவசிய தேவைகளுள் ஒன்று?

- மேசைக் கணினி மடிக்கணினி, கையேட்டுக் கணினி, உள்ளங்கைக் கணினி ஆகியவை அத்தியாவசிய தேவைகளுள் ஒன்று.
- கணினி அத்தியாவசிய தேவைகளுள் ஒன்று.

iv. எதனைக் கொண்டு சேமித்து வைக்க முடியும்?

- அலுவலகத் தகவல்கள் அனைத்தையும் மையப்படுத்தி, தரவு தளத்தில் சேமிக்க முடியும்.
- புகைப்படங்களைச் சேமித்து வைக்க முடியும்.
- தகவல்களைச் சேமிக்க முடியும்.
- கோப்புகளைச் சேமிக்க முடியும்.

தொடர்ந்து, நடைபெற்ற நடவடிக்கைகளுக்கு அடுத்து நடத்தப்பட்ட பின்னறித் தேர்வில் மாணவர்களின் கேள்விக் கேட்கும் திறனிலும் முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் திறனிலும் முதிர்ச்சியைக் காண முடிந்தது. மாணவர்கள் வினா அணுகுமுறையை மிகச் சரியாகப் பயன்படுத்தி இருந்தனர். மாணவர்கள் கண்டறிந்த முக்கியக் கருத்துகளும்

ஏற்புடையதாக அமைந்திருந்தது. அதுமட்டுமின்றி, ஆய்வாளர் உபயோகித்த திறம்பட கற்றல் கோட்பாடு இவ்வாய்விற்கு ஊன்றுகோளாக அமைந்தது. மாணவர்கள் ஒரே முறையை ஒவ்வொரு நடவடிக்கையிலும் மேற்கொள்ளும் பொழுது அவர்களின் புரிதலை அதிகரிக்க முடிந்தது. அதனால், மாணவர்கள் சுலபமாகப் பத்திகளில் உள்ள முக்கியக் கருத்துகளைக் கண்டறிந்தனர். அதுமட்டுமின்றி, மாணவர்கள் வினா முறையைப் பயன்படுத்தி மிக பொருத்தமான முக்கியக் கருத்துகளை அடையாளம் கண்டிருந்தனர். அவ்வகையில், பின்னறித் தேர்வில் மாணவர்கள் வினா அணுகுமுறையைப் பயன்படுத்தி கண்டறிந்த முக்கியக் கருத்துகள் பின்வருமாறு:

i. *இப்பனுவல் எதைக் குறிக்கிறது?*
   - தாய்மொழிக் கல்வியைக் குறித்தது.

ii. *தாய்மொழி எப்படிபட்ட மொழி?*
   - சிந்திக்கக் கற்றுக் கொடுக்கும் மொழி.
   - ஐம்புலன்கள் உணரக் கூடிய உணர்வுகளோடு ஊறிய மொழி.

*iii. நம் அடையாளத்தைப் பேண நாம் என்ன செய்ய வேண்டும்?*
   - தாய்மொழியை நாம் கற்க வேண்டும்.
   - தாய்மொழியில் பேசவும் கற்கவும் வேண்டும்.

iv. *ஏன் நாம் தாய்மொழியைக் கற்க வேண்டும்?*
   - ஒன்றைப் பற்றிய முழுமையான தகவல்களை உடனே வெளிப்படுத்த.
   - உணர்ந்தவற்றைத் தங்கு தடையின்றி வெளிப்படுத்த.
   - புதுச் சிந்தனைகள், கண்டுபிடிப்புகளில் ஈடுபடுத்திக் கொள்ள.

*v. எவற்றை நாம் அறிந்து கொள்ள தாய்மொழி உதவுகிறது?*
   - வரலாற்றுப் பதிவுகளை அறிந்து கொள்ள தாய்மொழி உதவுகிறது.
   - வாழ்வாதாரங்களை அறிந்து கொள்ள தாய்மொழி உதவுகிறது.

மேற்கண்ட மாணவர்களின் பதில்களின் வழி அவர்களின் முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் திறன் மேம்பட்டுள்ளது என்பதை உணர முடிந்தது. மாணவர்கள் பின்னறித் தேர்வில் கண்டறிந்த முக்கியக் கருத்துகள் யாவும் மிகப் பொருத்தமானதாகவும் தெளிவாகவும் அமைந்திருந்தது. அதுமட்டுமின்றி, இவ்வாய்வின் வழி ஒரு செயலைப் பலமுறை செய்து பார்ப்பதன் வழி மாணவர்களின் சிந்தனையாற்றாலும் ஆழமாக ஒன்றைப் புரிந்து கொள்ளும் திறனும் மேம்படுகிறது என்பதையும் அறிய முடிந்தது. இஃது இவ்வாய்வின் கண்டுப்பிடிப்பாகவும் வெற்றியாகவும் அமைந்தது. ஆகவே, வினாச் சொற்களின் வழி மாணவர்களின் முக்கியக் கருத்துகளைக் அடையாளம் காணும் திறன் விளைபயன் மிக்கது என்பதே இவ்வாய்வின் கண்டுப்பிடிப்பாக அமைந்துள்ளது.

ஆறு வாரங்களுக்கு நடத்தப்பட்ட நடவடிக்கைகள் மாணவர்களின் முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் திறனிலும் வாசிப்புத் திறனிலும் பாடப் பகுதியைப் புரிந்து கொள்ளும் திறனிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆய்வாளர் ஒவ்வொரு

நடவடிக்கைகளின் முடிவின் வழி அறிந்து கொண்டார். வினா அணுகுமுறையை உபயோகிக்கும் பொழுது மாணவர்கள் வாசிப்புப் பகுதியில் உள்ள மிகப் பொருத்தமான முக்கியக் கருத்துகளைக் கண்டறிந்தனர் என்பதும் இவ்வாய்வின் இறுதியில் அறியப்பட்டது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்கள் முன்னறித் தேர்வில் அதிகமான தவறுகளை மேற்கொண்டிந்தனர். இன்னும் சில மாணவர்கள் முக்கியக் கருத்தைக் கண்டறியும் வழிவகைகளையும் அறியாமல் இருந்தனர். மாணவர்களின் முன்னறித் தேர்வின் முடிவுகளும் திருப்திகரமானதாக அமையவில்லை.

ஆனால், பின்னறித் தேர்வில் மாணவர்கள் வாசிப்புப் பகுதியை நன்கு கிரகித்துக் கொண்டு மிகச் சரியான முக்கியக் கருத்துகளைக் கண்டறிந்தனர். மாணவர்கள் யாவராலும் ஆய்வாளரின் துணையை நாடாமல் சுயமாக இயங்க முடிந்தது. ஆய்வாளர் மாணவர்களின் தேர்வுத் தாளைத் திருத்தும் பொழுது அவர்களிடத்தில் மிகப் பெரிய மாற்றத்தைக் காண முடிந்தது. கடை நிலை மாணவர்களாலும் முக்கியக் கருத்துகளைச் சரியாகக் கண்டறிய முடிந்தது என்பதை ஆய்வாளர் அறிந்தார். இவ்வாய்வு சிறந்த விளைப்பயனைக் கொடுக்கும் ஆய்வாகவும் மாணவர்களின் முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் திறனை வலுப்படுத்த உதவிய ஆய்வாகவும் திகழ்வதற்கு வினா அணுகுமுறை முக்கியப் பங்காற்றியது. வினா முறை மாணவர்களின் ஆய்வுச் சிந்தனையையும் அறிவாற்றலையும் தூண்டியுள்ளது என்பதைக் கண்டறிய முடிந்தது. இம்முறையைப் பயன்படுத்தும் பொழுது மாணவர்களால் பல்வகையில் யோசிக்கவும் கேள்விகளை எழுப்பவும் முடிகிறது என்பதை ஆய்வாளர் கண்டறிந்தார்.

## தொகுப்புரை

சுருங்கக்கூறின், இரண்டாம் படிவ மாணவர்கள் முக்கியக் கருத்துகளை இலகுவாகக் கண்டறிய வினா அணுகுமுறையும் திறம்பட கற்றல் கோட்பாடும் உதவுகிறது. ஆகவே,மாய்வின் முடிவில் குறிப்பிட்டத்தைப் போல் மேலும் பல உத்திகளைக் கையாண்டு மாணவர்களைக் கவரும் வகையில் கற்றல் கற்பித்தலை ஆசிரியர்கள் மேற்கொண்டால் மாணவர்களின் முக்கியக் கருத்துகளைக் கண்டறியும் திறனை உயர்த்த முடியும். இஃது அவர்களின் தேர்வுக்கு கருத்துணர் கேள்விகளுக்கு விடையளிக்கவும் துணைப்புரியும்.

## துணைநூற்பட்டியல்


1. Ministry of Education Malaysia. (2005). *Secondary school Tamil language standard curriculum (இடைநிலைப்பள்ளி தமிழ்மொழிப் பாடத்திட்டம்).* Kuala Lumpur: Curriculum Development Centre.
2. Kingston Paul Tamburaj. (2016). *New approaches in teaching Tamil language (தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்).* Tanjong Malim: Sultan Idris Education University.

3. Abdul Aziz Abdul Talib. (2000). *Language testing: Principe, technique and example (Menguji kemahiran bahasa: Prinsip, teknik dan contoh)* Kuala Lumpur, Malaysia: Dewan Bahasa dan Pusaka.
4. Ministry of Education Malaysia. (2017). *Secondary school Tamil language standard curriculum (இடைநிலைப்பள்ளி தமிழ்மொழிப் பாடத்திட்டம்).* Kuala Lumpur: Curriculum Development Centre.
5. Nik Safiah Karim, Farid M Onn & Hashim Haji Musa. (1993). *Dewan Malay Grammar: New edition (Tatabahasa Dewan: Edisi Baharu)*. Kuala Lumpur, Malaysia: Dewan Bahasa dan Pustaka & Ministry of Education Malaysia.